மனிதநேய கவசம்

மாத இதழ்

MANITHA NEIYA KAVASAM

मणिथानेय कवसम्

Run by **Humanity Protection Organization Trust**

(Registered by Govt. of India)

Registration No. **TNTAM/25/A2910**

கவசம் Volume 2

இதழ் Issue 11

ஆகஸ்ட் 2026

₹.12/-

E-331/48, Meenakshi Road, TVS Nagar, Madurai - 625003. Ph : 0452-2600105

மதுரை மாநகராட்சி புதிய ஆணையாளராக 2.6.2026 அன்று பொறுப்பேற்ற

திரு. கௌரவ்குமார் IAS

அவர்களுக்கு மனிதநேய கவசம் மற்றும் மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

17.08.2026 அன்று 64 வயதில் அடியெடுத்து வைக்கும் விடுதலைக் கட்சி நிறுவனத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் **தொல். திருமாவளவன்** அவர்களுக்கு மனிதநேய கவசம் மற்றும் மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அருகில் முனைவர் **ந. அசோகன்**

உள்ளே.. முதலமைச்சர் அலுவலகத்திற்கு கோரிக்கை மனு அனுப்பும் முகவரி.... பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்

hpo.kavasam@gmail.com www.hpokavasam.org 98650 91526, 99525 33887

காரோஸ்®
பாரம்பரியமிக்க அக்மார்க் மரச்செக்கு எண்ணெய்கள்
காரோஸ்
COROS®
AGMARK WOODEN CHEKKU
SESAME OIL
COLD PRESSED
காரோஸ்
COROS®
AGMARK WOODEN CHEKKU
COCONUT OIL
COLD PRESSED
காரோஸ்
COROS®
AGMARK WOODEN CHEKKU
GROUNDNUT OIL
COLD PRESSED
COROS
Peanut Candy
காரோஸ்
COROS OIL
ISO 22000 CERTIFIED
ISO 22000 : 2018
fssai
12417032000133
भारत सरकार
GOVERNMENT OF INDIA
கடலை மிட்டாய் | கோகோ மிட்டாய் | எள் மிட்டாய் | பொரி உருண்டை
காரோஸ்® மரச்செக்கு எண்ணெய்
7, சேர்மன் A. சண்முகம் ரோடு, சிவகாசி.
தொடர்புக்கு : 73730 47255
corosoil.office@gmail.com
www.corosoil.com

ஆசிரியர் பார்வை....

அன்பார்ந்த நேயர்களே! வணக்கம்...

மனிதநேய கவசம் மாத இதழ் வாயிலாக பிரதி மாதம் தங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இயந்திரமான இன்றைய உலகில் நுகர்வோராகிய நாம் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்படுகிறோம். இந்நிகழ்வு நம்முடைய அறியாமையால் ஏற்படுவது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் நேரடியாக ஆன்லைன் மூலமாக பொருட்கள் வாங்கும்போது பல சந்தர்ப்பங்களில் நாம் தெரிந்தே ஏமாறுகிறோம். இதற்கு நாம் விழிப்புடன் இல்லாததே காரணம்.

இந்த இதழில் நுகர்வோர் பயன்பெறக்கூடிய தகவல்கள் பல இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, தற்போதைய புதிய **GST** வரி விதிப்பின் மூலம் நுகர்வோர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்கள்; உணவை திறந்து வைத்து சமைப்பதால் ஏற்படும் விளைவுகள்; கோடைக் காலத்தில் குழந்தைகள் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்; வாட்ஸ் ஆப் வழியாக நடக்கும் நூதனமான சைபர் கிரைம் மோசடி; இஎம்ஐ சுமையை எவ்வாறு குறைப்பது மற்றும் ஆன்லைனில் ஷாப்பிங் செய்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு தகவல்களுடன் துறை சார்ந்த நிகழ்வுகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

மீண்டும் புதிய செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்...

– முனைவர் **ந. அசோகன்,** பதிப்பாசிரியர் (பொ)

குருவின் கருணை!

மகான் ஸ்ரீ ராகவேந்திரர் ஒருமுறை, தனது யாத்திரையின் வழியில் இருந்த கிராமத்தில் தங்கினார். அப்போது ஊரரால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஓர் ஏழை பிராமணன் அவர் பாதங்களில் விழுந்தான்.

ஒரு தவறு செய்தேன். அதனால் ஊரே என்னை ஒதுக்கிவிட்டது. எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும் மக்கள் மன்னிக்கவில்லை! என்று அழுதான்

மகான் அவனைத் தன் பூஜையில் கலந்து கொள்ள அழைத்தார்.

உலகமே போற்றும் ஒரு மகானுக்கு அருகில் அவன் அமர்வதா! என்று ஊர்மக்கள் கொதித்தெழுந்தனர். ஸ்ரீ ராகவேந்திரர் தன் சங்கு தீர்த்தத்தை அவன் மீது தெளித்தார். அவன் பாவங்களைக் களைந்து விட்டதாகச் சொன்னார்.

தவறு செய்தவன் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டால், அவனை மன்னிப்பதே பெருந்தன்மை! என்று சொல்லி, அவனை அந்த ஊர்மக்களே ஏற்கச் செய்தார்.

HCPO அலுவலக புதிய முகவரி

மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன்
HUMANITY CONSUMER PROTECTION ORGANIZATION
No.12, Bharathiyar 4th Street, 1st Floor, Near Muthoot Finance,
Opp. Germanus Apartment, S.S.Colony, Madurai - 625 016.
REGD. No. 104/2007

மனிதநேய கவசம் 2 | இதழ் 11 | ஆகஸ்ட் 2026

நிறுவனர் மற்றும் வெளியீட்டாளர், ஆசிரியர்
முனைவர் **ந. அசோகன்** M.A.,
துணை ஆசிரியர்
Er. **மு. குமரன்** B.Tech.,
இணை ஆசிரியர்கள்
முனைவர் **க. ஜெயசங்கர்** D.M.E.,
முனைவர் **வ. சண்முகசுந்தரம்** M.A.,
திரு. **ச. குமரவேல்** B.Sc., M.A.,
(ப.நி., கூடுதல் காவல் கண்காணிப்பாளர்)
திரு. **N. சிவானந்தம்** D.M.E.,
புரவலர்கள்
முனைவர் **ப. கார்வாணன்**
முனைவர் **ப. கணேசன்**
திரு. **ரா. முருகானந்த்**
திரு. **ப. பாலாஜி**
திரு. **த. இராமச்சந்திரகுமார்** D.Pharm.,
முனைவர் **பா. சேசுராஜா** M.Sc., B.Ed.,
திரு. **காந்திலால் D. பட்டேல்**
திரு. **ச. ராமசுப்ரமணியன்**
திரு. **க. ஜெயசீலபாண்டியன்**
உதவி ஆசிரியர்கள்
திரு. **நீ.கி. கார்த்திக்** B.C.A.,
திரு. **ச. தாமோதரன்**
நிர்வாக மேலாளர்
திருமதி. **கோ. ஜெயலெட்சுமி** B.B.A.,
சிறப்பு நிருபர்
திரு. **சி. குட்லக் முருகன்** D.F.S.,
திரு. **R. முருகன்** B.A.,
புகைப்பட கலைஞர்
திரு. **ச. ராஜாகண்ணன்** D.M.E.,
திரு. **ரா. சுரேஷ்**
சட்ட ஆலோசகர்கள் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்
திரு. **ஜோ. அழகுராம் ஜோதி** M.A.,B.L.,
திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,
வெளியீட்டாளர் அலுவலக முகவரி :
மனிதநேய கவசம் மாத இதழ்
இ-331/48, மீனாட்சி ரோடு, TVS நகர்,
மதுரை - 625 003.
பிரிண்ட் பெயர் மற்றும் முகவரி :
Dr. **இரா. கண்ணன்** M.D.(E),
சுந்தரராஜா பிரிண்டர்
25B, R.M.S. காலனி, 4வது கிராஸ் தெரு,
முத்துப்பட்டி, மதுரை - 625 003.
இணையதளம் உருவாக்கம்
திரு. **மூ. குட்டிசங்கர்** B.Sc.,M.B.A.,
Ungal.com
தொலைபேசி எண் :
98650 91526, 99525 33887
மின்னஞ்சல் :
hpo.kavasam@gmail.com, www.hpokavasam.org

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே, விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு 'மனிதநேய கவசம்' பொறுப்பல்ல

Subject to Madurai Jurisdiction

இதழின் உள்ளே...

உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் உணவுகளைத் திறந்துவைத்தபடி சமைக்காதீர்கள்! எச்சரிக்கும் ICMR 5

கோடை காலத்தில் குழந்தைகள் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்?? 6

வாட்ஸ் ஆப் வழியாக நடக்கும்... நூதனமான சைபர் கிரைம் மோசடி... நடவடிக்கை எடுக்கும் மத்திய அரசு 7

சந்திராஷ்டமம்! வந்தால் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது? 9

EMI சுமையை குறைப்பது எப்படி? எளிமையான 4 வழிகள்... 10

PAN Card : பான் கார்டில் பெயர் மற்றும் முகவரியை மாற்ற வேண்டுமா? ஆன்லைனில் திருத்தம் செய்வது எப்படி? 12

அரசு ஊழியர்கள் மீதான ஊழல் குறித்த மொட்டைக் கடிதமாக இருந்தாலும் லஞ்ச ஒழிப்புத்துறை விசாரிக்கலாம் (ஐகோர்ட் கிளை உத்தரவு) 14

ஆன்லைனில் காலணி ஆர்டர் செய்த பெண்ணுக்கு காத்திருந்த அதிர்ச்சி... கவனம் தேவை... 15

திருச்சிராப்பள்ளியின் பாரம்பரிய இனிப்புகளின் பேரரசு **B.G. Naidu Sweets** .... 17 to 18

Director, M. Kutti Sankar B.Sc.,M.B.A.

Director@ungal.com

உணவுகளைத் திறந்துவைத்தபடி சமைக்காதீர்கள்! எச்சரிக்கும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ICMR

பெரும்பாலும் இந்தியர்கள் சமைக்கும்போது பாத்திரங்களை மூடி வைக்காமல் தான் சமைப்பார்கள். ஆனால், இதை 'தவறு' என்று கூறுகிறது இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR).

பாட்டி தாத்தா காலம், அதற்கு முந்தைய காலம் என பாரம்பரியமாகவே இந்தியாவில் பாத்திரங்களை மூடி வைத்து சமைக்கும் பழக்கம் இல்லை. நம் வீடுகளிலேயே இந்தப் பழக்கத்தைக் கவனிக்க முடியும். ஆனால், சமீபத்தில் வெளியான இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் உணவு வழிகாட்டுதலில், உணவு சமைக்கும்போது பாத்திரங்களை மூடி வைத்துத்தான் சமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

'பாத்திரங்களைத் திறந்து வைத்து சமைக்கும்போது, உணவு வேக நீண்ட நேரம் ஆகும். மேலும், உணவின் மீது காற்று பட்டு அதிலுள்ள சத்துக்களும் குறைந்துவிடும். இதுவே பாத்திரங்களை மூடி வைத்து சமைக்கும்போது, உணவும் சீக்கிரம் தயாராகிவிடும். சத்து குறைவதும் அவ்வளவாக இருக்காது' என்று காரணம் சொல்லப்பட்டுள்ளது.

செய்யலாம்... செய்யக்கூடாது

- பாத்திரத்தைத் திறந்து வைத்து சமைக்கும்போது உணவில் உள்ள கொழுப்பு மற்றும் எண்ணெய் சுற்றுப்புறத்தில் உள்ள ஆக்ஸிஜனோடு இணைவதால் உணவு கெட்டுப்போகலாம். சமைக்கும் உணவில் வைட்டமின்கள் இருந்தால், அவையும் கரைந்து போகலாம்.
- கீரைகள், அடர் நிறத்தில் இருக்கும் காய்கறிகள் ஆகியவற்றை பாத்திரங்களைத் திறந்து வைத்து சமைக்கக்கூடாது.
- ஸ்டார்ச் அதிகம் இருக்கும் உருளைக்கிழங்கு, மக்காச்சோளம் போன்ற உணவுகளைப் பாத்திரங்களைத் திறந்து வைத்து சமைக்கலாம்.
- ஒருவேளை பாத்திரங்களைத் திறந்து வைத்து சமைக்க விரும்பினால், குறைந்தளவு தண்ணீரைப் பயன்படுத்துங்கள். காய்கறிகளைச் சின்ன சின்னதாக வெட்டி சமைக்கும்போது சீக்கிரம் வெந்துவிடும் மற்றும் சத்தும் குறையாது.

கோடை காலத்தில் குழந்தைகள் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்??

சிறு குழந்தைகள் கோடையில் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது முக்கியம். ஏனெனில் அவர்களின் உடலுக்கு வெப்பத்தைத் தாங்கவும் ஆரோக்கியமாக இருக்கவும் தண்ணீர் தேவைப்படுகிறது. அவர்கள் போதுமான அளவு தண்ணீர் குடிக்கவில்லை என்றால், அவர்களுக்கு உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படக்கூடும்.

- குழந்தைகளின் வயது, எடை, உடல் செயல்பாடு ஆகியவற்றைப் பொறுத்து நீரின் தேவை மாறுபடும். பொதுவாக 1-3 வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு 4 கப் தண்ணீர் குடிக்க வேண்டும். 4-8 வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு 5 கப் தண்ணீர் குடிக்க வேண்டும். 9-13 வயதுடைய குழந்தைகள் ஒரு நாளைக்கு 7-8 கப் தண்ணீர் குடிக்க வேண்டும்.

- குழந்தைகள் விளையாடும் போது அல்லது உடல் செயல்பாடு செய்யும் போது அதிக தண்ணீர் குடிக்க வேண்டும். கோடை காலங்களில் குழந்தைகளுக்கு தாகம் எடுத்தால் உடனடியாக தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீர், பழச்சாறுகள், மோர், இளநீர் போன்ற திரவ உணவுகளையும் கொடுக்கலாம்.

- குறைவான தண்ணீர் குடிப்பதால் குழந்தைகளுக்கு சோர்வு, தலைவலி, தலைச்சுற்றல், மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும். கடுமையான சந்தர்ப்பங்களில் வெப்பப் பக்கவாதம் ஏற்படக்கூடிய அபாயமும் இருக்கிறது.

- குழந்தைகள் சரியாக தண்ணீர் குடிக்காவிட்டால் சிறுநீரகப் பிரச்சனைகள் ஏற்படலாம். சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்யாது. தண்ணீர் குறைவாக குடிப்பதால் மலச்சிக்கல் ஏற்படும். எரிச்சல் மற்றும் கவனமின்மை ஆகியவையும் ஏற்படலாம். நீரிழப்பு குழந்தைகளுக்கு எரிச்சல் மற்றும் செறிவு இல்லாமை ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.

- குழந்தைகளுக்கு பிடித்த கோப்பைகளில் தண்ணீர் கொடுங்கள். தண்ணீரில் எலுமிச்சை சாறு அல்லது புதினா துண்டுகளை சேர்க்கலாம். அடிக்கடி தண்ணீர் குடிக்க அவர்களுக்கு நினைவூட்டுங்கள். சாப்பிட்ட பிறகு தண்ணீர் குடிப்பதையும் விளையாடுவதையும் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

- நீர்ச்சத்து அதிகமுள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொடுங்கள். குழந்தைகள் வீட்டிலோ அல்லது வெளியிலோ விளையாடும் போது ஒரு பாட்டில் தண்ணீர் தயாராக வைத்திருங்கள். குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக, அவர்களுக்கு போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

வாட்ஸ் ஆப் வழியாக நடக்கும்... நூதனமான சைபர் கிரைம் மோசடி... நடவடிக்கை எடுக்கும் மத்திய அரசு

வாட்ஸ்அப் ஃபிஷிங் ஸ்கேம்கள் (Phishing Scams) அதிகரித்து வருவதால், மத்திய அரசு மக்களின் பாதுகாப்பிற்காக டிஜிட்டல் மோசடிகளை தடுக்கும் விதமாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆண்டு மட்டும் சைபர் குற்றங்களுடன் தொடர்புடைய 7.8 லட்சத்திற்கும் மேற்பட்ட சிம் கார்டுகள், 83,000 வாட்ஸ்அப் கணக்குகள் மற்றும் 3,000க்கும் அதிகமான ஸ்கைப் ஐடிகள் முடக்கப்பட்டுள்ளன என மத்திய உள்துறை இணை அமைச்சர் பண்டி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், உள்துறை அமைச்சகம் (MHA) 1930 என்ற பிரத்யேக சைபர் க்ரைம் உதவி எண்ணையும், www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் 'Check & report suspect' என்ற அம்சத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகளை மக்கள் உடனடியாகப் புகாரளிக்கலாம்.

வாட்ஸ்அப்பின் தாய் நிறுவனமான மெட்டா மற்றும் தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்படும் 'Scam Se Bacho' போன்ற விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மோசடி முயற்சிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவது குறித்து பயனர்களுக்குக் கற்பித்து வருகின்றன. இதன் மூலம், மத்திய அரசு வாட்ஸ்அப் ஃபிஷிங் மோசடிகளைத் தீவிரமாக எதிர்த்து வருகிறது. இந்தக் கடுமையான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், சைபர் குற்றவாளிகள் தங்கள் மோசடி உத்திகளை மிகவும் நுட்பமாக மாற்றி வருவதால், புதிய வழக்குகள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

உதாரணமாக, சமீபத்தில் ஹைதராபாத்தில், ஓய்வுபெற்ற 72 வயது அரசு அதிகாரி ஒருவர், ₹1.85 லட்சம் பணத்தை இழந்தார். ஹைதராபாத் மெட்ரோபொலிட்டன் வாட்டர் சப்ளை சிவரேஜ் போர்டில் **(HMWSSB)** இருந்து வந்தது போன்ற தோற்றமளிக்கும் ஒரு வாட்ஸ்அப் செய்தியே இந்த மோசடிக்குக் காரணம். போர்டின் லோகோவுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட கணக்கிலிருந்து வந்ததாகத் தோன்றிய இந்த மெசேஜில், அவர் தனது தண்ணீர் பில்லை புதுப்பிக்க ₹13 'டோக்கன் கட்டணம்' செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

அந்த அதிகாரி இணைப்பைக் கிளிக் செய்து பணம் செலுத்த முயன்றபோது, அவரது தொலைபேசி ஹேக் செய்யப்பட்டது. சில நிமிடங்களுக்குள்ளேயே, அவரது வங்கிக்

கணக்கிலிருந்து பத்து அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் மூலம் பணம் எடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாரதிய நியாய சன்ஹிதா மற்றும் ஐடி சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மோசடி செய்தவர்களைப் பணப் பரிவர்த்தனைகளின் தடயங்கள் மூலம் கண்டறியும் பணிகளில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

ஃபிஷிங் மோசடிகள் மக்களின் நம்பிக்கையை மற்றும் அவசர உணர்வைப் பயன்படுத்திக் கொள்கின்றன. குற்றவாளிகள் அரசு நிறுவனங்கள், வங்கிகள், கூரியர் நிறுவனங்கள் அல்லது வாட்ஸ்அப் போன்றவற்றைப் போலியாகப் பயன்படுத்தி, தனிநபர்களிடமிருந்து முக்கியமான தகவல்களைப் பெற முயற்சிக்கின்றனர். அதிகாரப்பூர்வ லோகோக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகள் போல காட்டிக் கொள்வது, பில் கட்டணங்கள் அல்லது கணக்கு சரிபார்ப்புக்கு அவசர கோரிக்கைகளை விடுப்பது போன்ற பொதுவான தந்திரங்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

கட்டண நுழைவாயில்கள் அல்லது சேவை புதுப்பிப்புகள் போல தோற்றமளிக்கும் தீங்கிழைக்கும் இணைப்புகளை அனுப்புவது, பாதுகாப்பு என்ற போர்வையில் OTP, PIN அல்லது தனிப்பட்ட விவரங்களைக் கேட்பது மற்றும் செயலி உள்ள பயனர்களின் கவனத்தை ஈர்க்க வெகுமதி என்றுகூறி missed call அழைப்புகளை விடுவது போன்றவையும் இதில் அடங்கும்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சைபர் குற்றங்களை வெகுவாகக் குறைத்தாலும், தனிநபர் விழிப்புணர்வே முதல் பாதுகாப்பு அரண் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர். தேவையற்ற வாட்ஸ்அப் செய்திகளில் வரும் இணைப்புகளைக் கிளிக் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பணம் செலுத்தும் கோரிக்கைகளை அதிகாரப்பூர்வ வலைத்தளங்கள் அல்லது வாடிக்கையாளர் சேவை எண்கள் மூலம் நேரடியாகச் சரிபார்க்க வேண்டும். **OTP**, **PIN** அல்லது வங்கி விவரங்களை தொலைபேசி அல்லது சாட் மூலம் ஒருபோதும் பகிரக்கூடாது. சந்தேகத்திற்கிடமான கணக்குகளை வாட்ஸ்அப்பின் உள்ளமைக்கப்பட்ட கருவியைப் பயன்படுத்திப் புகாரளிக்க வேண்டும். நிதி மோசடி ஏற்பட்டால், உடனடியாக 1930 என்ற அவசர தேசிய சைபர் குற்றம் புகார் போர்டல் **www. cybercrime.gov.in** ஐப் பயன்படுத்திப் புகாரளிக்க வேண்டும். ஹைதராபாத்தின் சமீபத்திய வழக்கு காட்டுவது போல, ஒரு கிளிக் சில சமயங்களில் பெரும் இழப்பை ஏற்படுத்தலாம்.

சந்திராஷ்டமம்!

வந்தால் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது?

ஒவ்வொரு ஜாதகத்திலும், சந்திரன் நின்ற கட்டம், ராசி எனப்படும். இந்த சந்திரன் நின்ற ராசிக் கட்டத்துக்கு 8-ஆவது இடத்தில், கோட்சார சந்திரன் சென்று கொண்டிருக்கும் காலமே சந்திராஷ்டமம் எனப்படும்.

அஷ்டமம் என்றால் எட்டு எனப் பொருள். சந்திரன் 8-ம் இடத்தில் நிற்கும் நேரம் சந்திராஷ்டம நாள் எனப்படும்.

சந்திரன், ஒரு ராசியைக் கடக்க 2¼ நாட்கள் எடுத்துக்கொள்ளும். பொதுவாக, இந்த 2¼ நாட்களையும் சந்திராஷ்டமம் ஓடுகிறது என குறிப்பிடுவர்.

எனினும், குறிப்பாக சந்திராஷ்டம நாள் என்பது, உங்களின் பிறந்த நட்சத்திரம் தொட்டு எண்ணிவரும் 17-ஆம் நட்சத்திரமே, சந்திராஷ்டம நட்சத்திரம் ஆகும். இது இந்த சந்திராஷ்டம நாள் 27 நாட்களுக்கு ஒருமுறை வரும். இந்த நாளில் மனம் சஞ்சலப்படும். புத்தி குழப்பமாகும். எனவே முடிவுகள் தவறாகப் போய் விட வாய்ப்பு உள்ளது. கவன சிதறலும் உண்டாகும்.

ஒரு முகமாக, சிந்திக்க இயலாது. எண்ணங்கள், செயல்களில் தடை உண்டாகும். எனவேதான் சந்திராஷ்டம தினங்களில் முக்கிய செயல்கள், முடிவுகளைத் தவிர்த்து விடுங்கள் என அறிவுரை கூறப்படுகிறது.

தினமும் நடைபெறும், தினப்படி வேலைகளில் கூட சொதப்பலான முடிவுகள் வந்து விடும்.

முதலமைச்சர் அலுவலகத்துக்கு கோரிக்கை மனு அனுப்பும் முகவரி

தமிழக முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் முதலமைச்சர் அலுவலகத்துக்கு கோரிக்கை மனுக்கள் இ-மெயில் வழியாக அனுப்பலாம். அதற்கான இணையதள முகவரியை தமிழக அரசு அறிவித்துள்ளது.

முதல்வரை சந்தித்து பேசுவதற்காக அனுமதி பெற office.tncm@gmail.com என்ற இ-மெயில் முகவரியை தொடர்பு கொள்ளலாம். இதேபோல் கோரிக்கை மனுக்கள் அனுப்ப cmo@tn.gov.in என்ற இ-மெயில் முகவரியை தொடர்பு கொள்ளலாம். மேலும் துறைகள் சார்ந்த கடிதப் போக்குவரத்திற்கு tncmosection2026@gmail.com என்ற இ-மெயில் முகவரியை அணுக வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

EMI சுமையை குறைப்பது எப்படி? எளிமையான 4 வழிகள்...

டென்ஷன் இல்லாத வாழ்க்கைக்கு என்ன செய்யலாம்!

நம்மில் பலரும் தெரியாமல் கடன் வாங்கிவிட்டு அந்தச் சூழலில் சிக்கிக் கொள்கிறோம். ஒரு முறை இஎம்ஐ சிக்கலில் மாட்டிக் கொண்டால் அதில் இருந்து மீண்டு வருவதே மிகக் கடினம். அதுபோல சிக்கிக் கொள்ளும் பலரையும் நாம் பார்த்து இருப்போம். அப்படி லோன் இஎம்ஐ பிரச்சனையில் மாட்டிக் கொள்வோர் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நாம் பார்க்கலாம்.

கடன் வாங்காமல் வாழ்க்கையை நடத்துவதே சிறந்த விஷயம். ஆனால், இந்தக் காலத்தில் பெரும்பாலான மக்களால் அப்படி இருக்க முடியவில்லை. சிறு சிறு செலவுகளுக்கு எல்லாம் கடன் வாங்கிவிடுகிறார்கள்.

இஎம்ஐ சூழல்

அதிலும் குறிப்பாகத் தனிநபர் கடன் வாங்கியவர்கள் இந்த இஎம்ஐ பிரச்சனையில் மாட்டிக் கொண்டு விழிக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். இதுபோல பர்சனல் லோன் இஎம்ஐ சிக்கலில் மாட்டியவர்கள் என்ன செய்யலாம், அதில் இருந்து தப்பிக்க என்ன வழி இருக்கிறது என்பது குறித்து நாம் விரிவாகப் பார்க்கலாம்.

அதற்கு முன்பு தனிநபர் கடன் இஎம்ஐ என்றால் என்ன என்பது குறித்து நாம் பார்க்கலாம். நீங்கள் மாத சம்பளதாரராக இருந்தால் உங்களுக்கு எளிதாக இந்த பர்சனல் லோன் கொடுப்பார்கள். அதிலும் உங்கள் சிபில் ஸ்கோர் சிறப்பாக இருந்தால் அவர்களாகவே அடிக்கடி போன் செய்து பர்சனல் லோன் வேண்டுமா எனக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள்.

வட்டி அதிகம்

இதில் விஷயம் என்னவென்றால் மற்ற வகையான கடன்களைக் காட்டிலும் இந்த பர்சனல் லோனுக்கு வட்டி அதிகம். ஏனென்றால் நகை, வீட்டுக் கடன்களுக்கு நாம் செக்யூரிட்டியாக நகை, பத்திரங்களைக் கொடுப்போம். ஆனால், பர்சனல் லோனில் அப்படி எதுவும் தேவைப்படாது. இதன் காரணமாகவே பர்சனல் லோனுக்கு வட்டி அதிகமாக இருக்கும். இதனால் அதிக இஎம்ஐ செலுத்தும் சூழல் ஏற்படும்போது, அது பாதிப்பை ஏற்படுத்தும். இதை எப்படி சரி செய்யலாம் என்பது குறித்து நாம் பார்க்கலாம்.

நான்கு வழிகள்

- உங்கள் வங்கியில் அதிக வட்டி இருந்து, வேறு வங்கிகள் குறைந்த வட்டியைக் கொடுப்பதாகச் சொன்னால் உங்கள் கடனை வேறு வங்கிக்கு மாற்றலாம். பலருக்கும் இப்படியொரு ஆப்ஷன் இருப்பது தெரியாது. ஆனால், பெரிய தொகை கடனாக வாங்கியவர்களுக்கு இது நிச்சயம் உதவும். இதன் மூலம் உங்கள் இஎம்ஐ தொகை கணிசமாகக் குறையும்.

- அடுத்து அசலை முன்கூட்டியே செலுத்துவது. பல்வேறு வல்லுநர்களும் இந்த திட்டத்தைத்தான் சொல்கிறார்கள். அதாவது உங்களுக்கு போனஸ், ஊதிய உயர்வு, கூடுதல் வருமானம் கிடைத்தால் அதை அப்படியே கடனுக்குச் செலுத்தி விடுங்கள். அதேபோல ஊதிய உயர்வு வந்தாலும் கூட அதைக் கருத்தில் கொள்ளாமல் கடனைச் செலுத்துங்கள். இதன் மூலம் உங்கள் கடனை சீக்கிரமே முடித்து இஎம்ஐ சுழலில் இருந்து நிரந்தரமாகவே விடுபட முடியும். அதேநேரம் இதற்கு வங்கிகளில் சில கட்டுப்பாடுகளும் இருக்கும். எனவே, அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- அடுத்து கடனை செலுத்தும் முறை. உங்களுக்கு ஒருவேளை 3, 4 வங்கிகளில் கடன் இருந்தால் முதலில் எந்த வங்கியில் குறைந்த கடன் இருக்கிறதோ அதைச் செலுத்தி க்ளோஸ் செய்யுங்கள். இது பெரும்பாலும் உளவியல் சார்ந்தது. ஒரு கடனை வெற்றிகரமாக முடித்தால் தான் உங்களுக்கே கடனை கட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை வரும்.
- அடுத்து இது கொஞ்சம் பிரபலமாகாத முறை. அதாவது கடன்களை ஒருங்கிணைப்பது. உங்களுக்குப் பல சிறிய கடன்கள் இருந்தால் அவற்றை ஒருங்கிணைத்து ஒரே கடனாக மாற்றலாம். இதற்குக் குறைந்த வட்டி கிடைக்கும். நீண்ட காலம் திருப்பிச் செலுத்தும் வகையில் இஎம்ஐ குறையும். ஆனால், இப்படிச் மாற்றும்போது இஎம்ஐ குறைந்து சிறிதுசிறிதாகப் பலரும் புதிய கடன்களை வாங்கிவிடுவார்கள். எனவே, இதில் கவனம் தேவை.

கவனிக்க வேண்டியவை :

- ஒரு விஷயத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். குறைந்த இஎம்ஐ என்றால் அதிக வட்டி போகும். எனவே, குறைந்த இஎம்ஐ கண்டு ஏமாற வேண்டாம்.
- கடனை முன்கூட்டியே செலுத்தும் போது, வங்கிகள் சில கட்டணங்களை விதிக்கும். அதைச் சரிபார்க்கவும்.
- கடன் காலத்தை முடிந்தவரை நீட்டிக்க வேண்டாம். மாதாந்திர தவணைகளைக் சரியாகச் செலுத்துங்கள். முடிந்தவரை சீக்கிரம் கடனை முடியுங்கள்.

இவை அனைத்தும் சின்ன சின்ன விஷயங்கள் போலத் தோன்றினாலும் அவை இஎம்ஐ சுழலில் இருந்து விடுபட நமக்கு உதவும். இவை அனைத்தையும் விட முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. அதாவது தேவையில்லாமல் கடன் வாங்க வேண்டாம்! டென்ஷன் இல்லாத வாழ்க்கைக்கு அதுவே தீர்வு.

இது ஒரு செய்தி மட்டுமே. இதை நிச்சயமாக முழுமையாக ஆலோசனையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முதலீடு சார்ந்த முடிவுகளை எடுக்கும் முன்பு உங்கள் பொருளாதார ஆலோசகரிடம் உரிய ஆலோசனையைக் கேட்டு பிறகு உங்களுக்கு ஏற்ற முடிவை எடுக்க வேண்டும்.

உப்பு உணவு வகைகளில் நுகர்வோர் கவனம்

உயர் ரத்தஅழுத்தம் கட்டுக்குள் இல்லாவிட்டால் இதயம், மூளை, சிறுநீரகம் ஆகிய முக்கிய உறுப்புகளில் பல நோய்களுக்கு வாசல் திறந்துவிடும்.

உயர் ரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்க மருத்துவர்கள் ஆலோசனைப்படி தொடர்ந்து சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் உணவுக் கட்டுப்பாடும் முக்கியம். உயர் ரத்த அழுத்த நோய் அதிகரிக்காமல் இருக்கவும் முயலலாம்.

எப்போதும் உப்பு அதிகம் உள்ள உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். அதேபோல நாள்தோறும் உப்பின் அளவையும் குறைத்துக் கொள்ள வேண்டும். சிப்ஸ், ஊறுகாய், உப்பு வற்றல், கருவாடு, உப்புக்கண்டம் போன்றவற்றைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

உப்பு அதிகம் உள்ள நொறுக்குவகைகளும் தவிர்க்க வேண்டியவைதான். உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி தினசரி 4-5 கிராம் உப்பு போதுமானது. ஆனால், இந்தியாவில் உள்ள பல உணவு வகைகளில் 10-12 கிராம் வரை உப்பு சேர்க்கப்படுகிறது.

குறிப்பாக, அசைவ உணவு வகைகளில் காரம், உப்பு, மசாலா தூக்கலாகவே இருக்கும். இவற்றைத் தவிர்க்க வேண்டும் அல்லது குறைத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் கொழுப்பு அதிகமுள்ள ஆட்டிறைச்சி உள்ளிட்டவற்றைத் தவிர்ப்பது நல்லது. கொழுப்பு குறைவான கோழி இறைச்சி, மீன் உள்ளிட்டவற்றைச் சாப்பிடலாம். அவற்றையும் எந்த அளவில் சாப்பிட வேண்டும் என்பதை ஊட்டச்சத்து நிபுணர்களின் பரிந்துரையின்பேரில் பின்பற்றுவது நல்லது.

PAN Card : பான் கார்டில் பெயர் மற்றும் முகவரியை மாற்ற வேண்டுமா? ஆன்லைனில் திருத்தம் செய்வது எப்படி?

வங்கி, வருமான வரி சேவை மட்டுமல்லாது அரசின் பல்வேறு முக்கிய சேவைகளைப் பெறுவதற்கும், கடன் பெறுவதற்கும் பான் கார்டு மிக முக்கியமாக உள்ளது. இந்நிலையில் முகவரி மாற்றம், பெயர் மாற்றம், புகைப்படம் மாற்றம் அல்லது அதில் ஏதேனும் பிழை இருந்தால் ஆன்லைனிலேயே மாற்றுவது எப்படி என பார்க்கலாம்.

பான் கார்டு (PAN Card - Permanent Account Number Card) என்பது இந்திய வருமானவரி துறையால் (Income Tax Department of India) வழங்கப்படும் ஒரு தனிப்பட்ட அடையாள அட்டை ஆகும். இது ஒரு 10 இலக்க அடையாள எண் கொண்ட அட்டை. ஒவ்வொருக்கும் தனி தனி 10 இலக்க அடையாள எண் இருக்கும்.

பான் கார்டு வங்கிகளில் கணக்கு துவங்க, வருமான வரி செலுத்த, பங்கு வாங்க, கடன் பெற மற்றும் அதிக தொகையினை வங்கி மூலம் பரிமாற்றங்கள் செய்யும் போது அவசியமாகும். பான் கார்டு இல்லாமல் நீங்கள் பெரிய பண பரிமாற்றம், சேமிப்புத் திட்டங்கள், IPO முதலியவற்றை செய்ய முடியாது.

பான் கார்டு திருத்தம்

வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகள், பெரிய பணப் பரிமாற்றங்கள், சொத்து வாங்கும் போது பான் கார்டு இருந்தால் தான் வேலைகள் எளிதாக நடக்கும். அரசு திட்டங்களில் நன்மைகள் பெறுவதற்கும் பான் கார்டு பயன்படுத்தப்படுகிறது.

பான் கார்டில் நமது பெயர், பிறந்த தேதி, பாலினம், தந்தையின் பெயர், முகவரி மற்றும் புகைப்படம் போன்ற விவரங்கள் இடம்பெறும். இதன் மூலம் நமது அடையாளம் உறுதிப்படுத்தப்படுகிறது.

வருமான வரி

சுருக்கமாகச் சொல்வதானால், பான் கார்டு வருமான வரி தொடர்பான அடையாள அட்டை மட்டுமல்ல. வங்கி, அரசு மற்றும் நிதி சேவைகளை எளிதாக பெற உதவும் மிக முக்கிய ஆவணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் பான் கார்டில் உள்ள விவரங்களை எப்போதும் புதுப்பித்ததாக வைத்திருப்பது அவசியம். ஒருவேளை பான் கார்டில் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டி இருந்தால் அதனை உடனே செய்ய வேண்டும். இதற்காக பல நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. ஆன்லைனிலேயே பான் கார்டுகளில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும். அதனை எவ்வாறு செய்வது என்பது குறித்து பார்க்கலாம்.

ஆன்லைன் பான் மாற்றம்

புதிய பான் கார்டு விண்ணப்பிக்க மற்றும் திருத்தம் செய்ய http://onlineservices.nsdl.com/paam/ என்ற அரசின் அதிகாரப்பூர்வ இணையதளப் பக்கத்திற்கு செல்ல வேண்டும். தொடர்ந்து அந்தப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள Application Type என்ற ஆப்ஷனை கிளிக் செய்து Changes or Correction in Existing PAN Card என்பதைத் தேர்வு செய்யவும். அடுத்து, பான் கார்டு திருத்தம் செய்வதற்கான அடிப்படை விவரங்களை இந்தப் பக்கத்தில் பூர்த்தி செய்யவும்.

NSDL பான் சேவை

பின்னர் உங்கள் இமெயில் எண்ணிற்கு டோக்கன் எண் அனுப்பப்படும். அதை சேமித்து வைக்கவும். உங்கள் டோக்கன் எண் இமெயிலுக்கு அனுப்பப்படும் என்பதால் Email ID-ஐ சரியாக கொடுக்க வேண்டும். தொடர்ந்து

விண்ணப்ப பக்கம் சென்று அடையாளச் சான்று, முகவரி சான்று மற்றும் டிஜிட்டல் கையெழுத்து உள்ளிட்ட விவரங்களைப் பதிவேற்ற வேண்டும். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் பூர்த்தி செய்த பின் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய அட்டை : இதற்கு சேவை கட்டணமாக ரூ.110 செலுத்த வேண்டும். ஆன்லைனில் பணம் செலுத்தி படிவத்தை சமர்ப்பித்தால் உங்கள் PAN Cardல் திருத்தம் செய்யப்பட்ட புதிய அட்டை வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த நடைமுறைகளை சரியாக பின்பற்றி, உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்தாலே எவ்வித சிக்கலும் இன்றி திருத்தப்பட்ட பான் கார்டு உங்கள் வீட்டிற்கே வந்து விடும்.

அரசு ஊழியர்கள் மீதான ஊழல் குறித்த மொட்டைக் கடிதமாக இருந்தாலும் லஞ்ச ஒழிப்புத்துறை விசாரிக்கலாம் (ஐகோர்ட் கிளை உத்தரவு)

திண்டுக்கல் சேர்ந்த சுப்பிரமணியன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், திண்டுக்கல் மாவட்ட தொழிலாளர் நலத்துறை இணை ஆணையராக நான் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு 2027-ஆம் வரையில் தொழிலாளர் நலத்துறை கூடுதல் ஆணையராகப் பதவி உயர்வு கிடைக்க உள்ளது. 2024-ஆம் ஆண்டு தொழிலாளர் நலத்துறைச் செயலாளருக்கு கிடைத்த மொட்டைக் கடிதத்தில், எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களிடம் நான் லஞ்சம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறைக்கு மொட்டைக் கடிதத்தை அனுப்பி, விசாரணை நடத்துமாறு அரசு உத்தரவிட்டது. இதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி பி. புகழேந்தி முன் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், இந்தப் புகாரில் லஞ்சப் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டதாகவும், வங்கி பரிவர்த்தனை விவரங்கள் இருந்ததால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. 105 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மனுதாரர் மீதான முதல் குற்றச்சாட்டு முழுவதுமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் மீது

துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்யப்பட்டுள்ளது என கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, அரசாணை 173ன் படி மொட்டைக் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அறிவுறுத்தல் இருந்தாலும், அது லஞ்ச ஒழிப்புத்துறையைக் கட்டுப்படுத்தாது. அரசு ஊழியர்களிடையே நடக்கும் ஊழல்களையும், முறைகேடுகளையும் கண்டறிந்து வெளிக்கொண்டு வருவது லஞ்ச ஒழிப்புத்துறையின் முக்கியப் பொறுப்பு. புகாரில் உண்மைத்தன்மை இருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில், அதனை விசாரிப்பதில் எந்தத் தவறும் இல்லை. முதல் கட்ட விசாரணைக்கு உத்தரவிட்ட அரசின் செயல் சரியானது. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என உத்தரவிட்டார்.

ஆன்லைனில் காலணி ஆர்டர் செய்த பெண்ணுக்கு காத்திருந்த அதிர்ச்சி... கவனம் தேவை...



சைபர் குற்றங்கள் நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்து வருகின்றன. சமீபத்திய ஒரு நிகழ்வில், சைபர் தாக்குதல் நடத்தியவர்கள் ஒரு பெண்ணை ஏமாற்றி ரூ.50,000-க்கு மேல் பணம் பறித்துள்ளனர். அதாவது பாதிக்கப்பட்ட பெண் ஒரு இகாமர்ஸ் தளத்திலிருந்து தனக்காக காலணிகளை ஆர்டர் செய்திருந்தார். சிறிது நேரம் கழித்து, முகவரியைப் புதுப்பிக்குமாறு கேட்டு ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை அந்தப் பெண் கிளிக் செய்தவுடன், அவரது கிரெடிட் கார்டிலிருந்து பணம் பறந்து சென்றது. முழு விவரத்தையும் தெரிந்து கொள்வோம்.

என்ன நடந்தது?

டெல்லியைச் சேர்ந்த மதுயிகா சர்மா (Madhuika Sharma), ஒரு இகாமர்ஸ் தளத்திலிருந்து ரூ.6,000 மதிப்புள்ள காலணிகளை ஆர்டர் செய்திருந்தார். அதன் பிறகு, வீட்டு எண் முகவரியில் கொடுக்கப்படாததால், உங்கள் ஆர்டரின் டெலிவரி நிறுத்தப்பட்டுள்ளதாக அவருக்கு ஒரு செய்தி வந்தது. பாதிக்கப்பட்டவருக்கு வெவ்வேறு எண்களில் இருந்து ஒரே செய்தி வந்தது. பாதிக்கப்பட்டவர் இது ஒரு உண்மையான செய்தி என்று நினைத்து அதில் உள்ள இணைப்பைத் திறந்தார். இந்த இணைப்பு அந்தப் பெண்ணை

dhlino.cc.in என்ற வலைத்தளத்திற்கு அழைத்துச் சென்றது.

அந்தப் பெண் இங்கே விவரங்களை உள்ளிட்டுவிட்டார், அவரது கிரெடிட் கார்டிலிருந்து ரூ.51,700 எடுக்கப்பட்டது.

புகாரின் மீது எந்த நடவடிக்கையும் இல்லை:

இந்த மோசடி குறித்து வங்கி மற்றும் பிற நிறுவனங்களுக்கு தெரிவித்தபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பெண் கூறினார். இந்த மோசடியில் பெண்ணின் கிரெடிட் கார்டில் இருந்து காணாமல் போன பணத்தை வங்கி தனது பில்லில் சேர்த்தது. இப்போது அந்தப் பெண் வங்கி, ரிசர்வ் வங்கி மற்றும் பிற நிறுவனங்களுக்கு உதவி கேட்டு முறையிட்டுள்ளார்.

இதுபோன்ற மோசடிகளை எவ்வாறு தவிர்ப்பது?

இப்போதெல்லாம், சைபர் மோசடி வழக்குகள் வேகமாக வெளிப்பட்டு வருகின்றன. சைபர் மோசடி செய்பவர்கள் பல்வேறு வழிகளில் மக்களை தங்கள் வலையில் சிக்க வைக்க முயற்சிக்கின்றனர். அவற்றைத் தவிர்க்க, பல விஷயங்களை மனதில் கொள்வது அவசியம். தெரியாத அல்லது சந்தேகத்திற்கிடமான எண்களிலிருந்து வரும் செய்திகள் அல்லது அழைப்புகளை ஒருபோதும் திறக்க வேண்டாம். பொதுவாக, டெலிவரி நிறுவனங்கள் உங்களுக்குத் தனிப்பட்ட தகவல்களைக் கேட்க மாட்டார்கள். சந்தேகத்திற்கிடமான எண்களிலிருந்து வரும் செய்தி அல்லது அழைப்புகளை அலட்சியப்படுத்த வேண்டும்.

அஞ்சலில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் (link) கிளிக் செய்ய வேண்டாம். இவை பெரும்பாலும் ஃபிஷிங் (Phishing) இணைப்புகளாக இருக்கும். யாராவது உங்களை அழைத்து டெலிவரி ஏஜென்ட் என்று கூறி முக்கியமான தகவல்களைக் கேட்டால், எப்போதும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ வாடிக்கையாளர் சேவையைத் (official customer service) தொடர்பு கொண்டு சரிபார்க்கவும். நீங்கள் ஏமாற்றப்பட்டிருந்தால், உடனடியாக வங்கி மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தெரிவித்து, உங்கள் கிரெடிட்/டெபிட் கார்டுகளை முடக்கவும். மேலும், சைபர் குற்றப் புகார் எண்ணான 1930-ஐ அழைத்து புகாரளிக்கவும்.

ஆர்டர் செய்த தளத்தின் உண்மையான இணையதள முகவரியை (URL) சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மொபைலில் வரும் OTP (One-Time Password) எண்ணை யாருடனும் பகிர வேண்டாம். வங்கி அல்லது டெலிவரி நிறுவனங்கள் ஒருபோதும் OTP கேட்க மாட்டார்கள். மொபைல் போன், கணினி போன்ற சாதனங்களில் நம்பகமான வைரஸ் தடுப்பு மென்பொருளை (Antivirus software) பயன்படுத்துங்கள். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், இதுபோன்ற சைபர் மோசடிகளில் சிக்காமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

திருச்சிராப்பள்ளியின் பாரம்பரிய இனிப்புகளின் பேரரசு B.G. Naidu Sweets

திரு. **பி. பாலாஜி**
(Managing Director)

இந்திய விடுதலைக்கு முன்பே, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக **B.G. Naidu Sweets** இனிப்பின் அடையாளமாக திகழ்கிறது. 1906-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி.கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் திருச்சியின் பாலக்கரையில் சிறிய இனிப்புக் கடையைத் தொடங்கியதிலிருந்து இந்தப் பயணம் ஆரம்பமானது.

அந்தச் சிறிய கடை இன்று தலைமுறைகள் நம்பும் ஒரு புகழ்பெற்ற நிறுவனமாக வளர்ந்துள்ளது. தற்போது திருச்சி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 50-க்கும் மேற்பட்ட கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.

118 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம், தரம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையின் காரணமாக, திருச்சியில் இனிப்புகள் வாங்க வேண்டும் என்றால் முதலில் நினைவுக்கு வருவது **B.G. Naidu Sweets** ஆகும். தமிழகம் முழுவதும் குடும்ப விழாக்கள், பண்டிகைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளில் இந்நிறுவனத்தின் இனிப்புகள் முக்கிய இடம் பெற்றுள்ளன.

இந்நிறுவனம் இனிப்புகள் மட்டுமல்லாமல், பாரம்பரிய கார வகைகளையும் தயாரிக்கிறது. அனைத்து இனிப்புகளும் உயர்தர மூலப்பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. செயற்கை நிறங்கள், பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் செயற்கை இனிப்பூட்டிகள் பயன்படுத்தப்படுவதில்லை. பால் சார்ந்த இனிப்புகளுக்கான பால், நிறுவனத்தின் சொந்த மாட்டுப் பண்ணையிலிருந்து பெறப்படுவதால் தூய்மையும் தரமும் உறுதி செய்யப்படுகிறது.

திரு. பி. பாலாஜி (Managing Director) மற்றும் அவரது சகோதரர்கள் நிறுவனத்தை முன்னெடுத்து, தரத்தில் எந்த சமரசமும் செய்யாமல் தமிழகம் முழுவதும் வளர்ச்சி அடையச் செய்துள்ளனர். இந்த அர்ப்பணிப்பிற்காக 2021-ஆம் ஆண்டு **Times Business Awards**-இல் **Best Sweets and Snacks in Madurai and Trichy** என்ற விருதைப் பெற்றுள்ளது.

மேலும், **B.G. Naidu Bakery** மூலம் புதிதாக தயாரிக்கப்படும் கேக்குகள், பஃப்ஸ் மற்றும் பல பேக்கரி உணவுகளையும் வழங்குகிறது.

பிரபலமான இனிப்புகள்:

- ★ நெய் கேக் (Ghee Cake)
- ★ வாழைப்பழ கேக் (Banana Cake)
- ★ பட்டர் பிஸ்கட் (Butter Biscuits)
- ★ **B.G. Naidu** லட்டு
- ★ மைசூர் பாக்
- ★ பாதாம் ஹல்வா
- ★ காஜு கட்லி
- ★ முந்திரி ஹல்வா
- ★ சந்திரகலா
- ★ மிக்சர்
- ★ மிளகு காரா சேவு

நவதானியம் உள்ளிட்ட பல பாரம்பரிய சுவைகள்.

பாரம்பரியத்திலிருந்து புதுமை வரை, தரம், நம்பிக்கை மற்றும் சுவையை ஒருங்கிணைத்து, தமிழக மக்களின் மனதில் தனி இடம் பிடித்திருக்கும் இனிப்பு உலகமாக **B.G. Naidu Sweets** தொடர்ந்து திகழ்கிறது.

SINCE 1908 TRADITIONAL BY GENERATIONS
Celebrating 118 Years
MADE FROM BG Naidu FARM FRESH COW MILK 100% NATURAL
Traditional by Generations
BGN EST 1908
BG நாயுடு
ஸ்வீட்ஸ் | ஸ்நாக்ஸ் | பேக்கரி
சொந்த பண்ணை பாலில் தயாராகும் இனிப்புகள்...
திரு. ப. பாலாஜி
சேர்மன் - B.G.நாயுடு
BG Naidu
HAPPY DIWALI
FESTIVAL SWEETS
BG Naidu
HAPPY DIWALI
FESTIVAL SWEETS
BG Naidu
BADAM MILK
BG Naidu
Elaneer Payasam
BG Naidu
ROSE MILK
BGN 1908
BG Naidu
Traditional by Generations
BG Naidu Sweets Pvt Ltd
Head Office: 29–K, Elango Street, Sangliandapuram
Trichy 620001. sales@bgnaidusweets.com
www.bgnaidusweets.com | /bgnaidusweets
46+ BRANCHES @ TRICHY, MADURAI, PUDUKKOTAI, PERAMBALUR, DINDIGUL, THANJAVUR, PATTUKOTTAI & KARAIKUDI
For Corporate Order & Bulk Orders: +91 9514686868
fssai Lic No. 12418028000292
46+ BRANCHES
BG Naidu
TIMES BUSINESS AWARDS WINNER
BG Naidu FARM FRESH COW MILK

Rajmahal
Silks • Textiles • Readymades
A Tradition of Excellence in Silk
47 & 48, EAST VELI STREET, MADURAI-1
PH : 72000 07373
Rajmahal's
Silk Story
A Tale of Exclusive Weaves
169, KK NAGAR, EAST 5TH STREET, MADURAI - 20
PH : 95007 95005
Rajmahal's
AISHVARYAM
GOLD • SILVER • DIAMONDS • PLATINUM
THANGANAGAI MAALIGAI
191, EAST VELI STREET, MADURAI - 625001
PH : 74488 80740
WHATSAPP SHOPPING // 72003 33333, 72001 11111
Online Shopping //www.rajmahalsilks.com